بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுᵁல்லாஹுᵁத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 15/09/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுᵁமுஆ பேருரையின் சுருக்கம்**

**சாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய சய்யிதா அமத்துல் குத்தூஸ் சாஹிபா அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இந்த உலகில் வந்த மனிதர் எவராயினும், ஒரு குறிப்பிட்ட காலத்தைக் கழித்த பின்னர் இந்த உலகை விட்டு விடைபெற வேண்டும் என்பது அல்லாஹ்வின் சட்டமாகும்.

ஆனால், நல்ல நினைவுகளை மட்டும் விட்டுச் செல்பவர்கள், மனிதர்களுக்குப் பலனளிப்பவர்கள், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கான செயல் முன்மாதியாகத் திகழ்பவர்கள், அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைகள் படி செயல்பட முயற்சி செய்பவர்களாக இருப்பவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்திற்கான உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்பவர்கள், அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உண்மையான நன்றியுணர்வு கொண்டவர்கள், அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை செலுத்துவதற்கு இயன்ற அளவு முயற்சி செய்பவர்கள், அல்லாஹ் தம்மீது திருப்தியடைவதற்காக எந்நேரமும் முயற்சி செய்பவர்கள், எவர்களுக்காக எல்லா நாவுகளில் இருந்தும் புகழாரச் சொற்கள் மட்டுமே வருகின்றனவோ அந்த மக்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவார்கள். இவ்வாறு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பொன்மொழிக்கு ஏற்ப அவர்கள் மீது சுவர்க்கம் கடமையாகி விடுகிறது.

இப்பொழுது நான் இப்படிப்பட்ட ஒரு நபரைப் பற்றித்தான் கூறப்போகிறேன். இந்த நற்குறிப்பு, ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்களின் மகளும், சாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிப் அவர்களின் துணைவியாரும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மருமகளுமாகிய மதிப்பிற்குரிய அமத்துல் குத்தூஸ் சாஹிபா அவர்களைப் பற்றியதாகும். இவர்கள் காதியானில்தான் வாழ்ந்து வந்தார்கள். ஆனால், கடந்த சில காலமாக தம் மகள்களிடம் ரப்வாவுக்கு வந்திருந்தார்கள். அங்கு இவர்கள் 96 வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அல்லாஹ்வின் அருளால் ஒன்பதில் ஒரு பங்கு வஸிய்யத் செய்திருந்த மூஸியாவாக இருந்தார்கள். 1951 இன் ஜல்ஸா சாலானாவின் சந்தர்ப்பத்தில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவர்களுக்கு சாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிப் அவர்களுடன் நிக்காஹ் நடத்தினார்கள். திருமண வழியனுப்புதலின் போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தம் மகனுக்குப் பதிலாக, பெண் வீட்டார் சார்பாக கலந்து கொண்டார்கள்.

அல்லாஹ் மர்ஹூமா அவர்களுக்கு மூன்று மகள்களையும் ஒரு மகனையும் வழங்கினான். ஒரு மகள் அமத்துல் அலீம் சாஹிபா இப்பொழுது பாக்கிஸ்தானின் சத்ர் லஜ்னாவாக இருக்கிறார்கள். அவர்கள் வக்கீலே அஃலா தஹ்ரீகே ஜதீத், மதிப்பிற்குரிய மன்ஸூர் அஹ்மத் சாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். இரண்டாவது மகள் அமத்துல் கரீம் சாஹிபா அவர்கள் கேப்டன் மாஜித் சாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். மூன்றாவது மகள் அமத்துர் ரவூஃப் சாஹிபா அவர்கள் டாக்டர் இப்ராஹீம் முனீப் சாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். மிர்ஸா கலீம் அஹ்மத் சாஹிப் அவர்கள் மர்ஹூமாவின் மகனாவார்கள். அவர்கள் அமெரிக்காவில் வசிக்கிறார்கள்.

சாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிப் அவர்கள் தமது திருமண நேரத்தில் பாக்கிஸ்தானுக்கு வந்திருந்த போது, அவர்களுக்குத் திருமணமாகி சில நாள்களே ஆகியிருந்த நிலையில், அவர்கள் தம் துணைவியார் அவர்களை காதியானுக்கு உடன் அழைத்துச் செல்வதற்காக ஆவணங்களைத் தயார் செய்ய வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்தியா, பாக்கிஸ்தான் தொடர்புகளில் ஏற்றம் இறக்கம் வந்து கொண்டிருப்பது போன்று, அந்த நாள்களிலும் இழுபறி ஆரம்பித்து விட்டது.

இத்தகைய நிலைமையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: மனைவியின் ஆவணங்களோ தயாராகிக் கொண்டே இருக்கும். நீர் அவரை விடுங்கள். உடனடியாக காதியானுக்குத் திரும்பிச் செல்லுங்கள். ஏனெனில், அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த நபர் யாராவது ஒருவர் இருக்க வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: உடனடியாக விமானத்தில் இருக்கையை முன்பதிவு செய்யுங்கள். விமானம் கிடைக்கவில்லை என்றாலும், தனிவிமானம் எடுக்க வேண்டி வந்தாலும் சரி, நீர் செல்வது அவசியமாகும். மேலும், கூறினார்கள்: நீர் உமது முன்மாதிரியை முன்வைக்கவில்லை என்றால், தியாகம் செய்யவில்லை என்றால், மக்கள் எவ்வாறு தியாகம் செய்வார்கள்?

எங்கு இந்தத் தியாகம் சாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிப் அவர்களுடையதாக இருந்ததோ, அங்கு அமத்துல் குத்தூஸ் சாஹிபா அவர்களின் தியாகமுமாக இருந்தது. ஆவணங்கள் எப்பொழுது முழுமை அடையும் என்பது தெரியாமல் இருந்தது. (நாட்டில்) பதற்றமான சூழ்நிலை நிலவியது. இவ்வனைத்து இருந்தும், காலத்தின் கலீஃபா அவர்களின்

கட்டளையாக இருந்தது; எனவே, மிக்க மகிழ்ச்சியுடன் தம் கணவரை வழியனுப்பி வைத்தார்கள். உலகத்தைவிட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளித்தார்கள்.

மதிப்பிற்குரிய அமத்துல் குத்தூஸ் சாஹிபா அவர்களுடைய ஆவணங்கள் முழுமையடைவதில் ஏறத்தாழ ஓராண்டு ஆகி விட்டது. இவர்கள் காதியான் செல்ல முற்பட்ட போது, இவர்கள் கூறுகிறார்கள்:- ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் எனக்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பாதங்கள் அதிகம் பட்ட, உம்மே நாஸிர் அவர்களின் வீட்டில் தங்குங்கள். அவர்களின் வீட்டின் முற்றத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் தர்ஸும் வழங்கியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இவர்களுக்கு, 'லஜ்னாவின் குழுக்களை ஒன்று திரட்டுங்கள்' என்ற அறிவுரையையும் வழங்கியிருந்தார்கள். எனவே, சாஹிப்ஸாதீ அமத்துல் குத்தூஸ் சாஹிபா அவர்கள் காதியானுக்குச் சென்று ஜமாஅத் பெண்களை ஒன்றுதிரட்டுவதிலும் அவர்களுடன் அனுதாபம் காட்டுவதிலும் மிக முக்கியமான பங்களித்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் லண்டன் வந்தடைந்த பிறகு, முதல் குத்பா ஜுமுஆவில் ஐரோப்பாவில் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக இரண்டு தலைமையகங்களை உருவாக்குவதற்காகப் பொருள் தியாகம் செய்யுமாறு திட்டம் அறிவித்தார்கள். அப்பொழுது இந்தியாவின் சத்ர் லஜ்னாவாக இருந்த மதிப்பிற்குரிய அமத்துல் குத்தூஸ் சாஹிபா அவர்களின் தலைமையில் இந்தியாவின் லஜ்னா உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு பெற்றார்கள். இவர்கள் தாமும் தம்முடைய அனைத்து நகைகளையும் இந்தத் திட்டத்தில் அர்ப்பணித்து விட்டார்கள்.

1991 இல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் காதியானுக்குச் சென்ற போது, அந்த சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (ரஹி) அவர்கள் காதியானின் பொருள் தியாகங்கள் பற்றி, பெரிதும் மனதை ஈர்க்கும் வகையில் கூறினார்கள். அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வின் அருளுடன், இந்தியாவின் லஜ்னா உறுப்பினர்களில் அனைவர் பற்றியும் என்னால் சொல்ல முடியாது என்றாலும், 'பொருள் தியாகத்தில் இவர்கள் நிகரற்ற முன்மாதிரியைக் காட்டக்கூடியவர்கள் ஆவார்கள்' என்று காதியானின் லஜ்னா உறுப்பினர்கள் பற்றி என்னால் சொல்ல முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இவர்களை காதியானுக்கு அனுப்பி வைக்கையில், லஜ்னாவின் குழுக்களை ஒன்று சேர்க்க வேண்டும்' என்ற அறிவுரையையும் செய்ததனால், இவர்கள் அங்கு சென்றதுமே முதலில் காதியானின் ஜென்ரல் செகரட்டரீயாக ஆனார்கள். பிறகு, 1955 இல் உள்ளூர் சத்ர் லஜ்னாவாகவும், பிறகு, இந்திய சத்ர் லஜ்னாவாகவும் தேர்வானார்கள். இவர்களின் இந்தத் தொண்டு காலம் 46 ஆண்டுகள் ஆகிறது.

அமத்துல் குத்தூஸ் சாஹிபா அவர்கள் திருக்குர்ஆனுக்குப் பெரும் தொண்டாற்றினார்கள். காதியானின் 250 பெண்பிள்ளைகளுக்குத் திருக்குர்ஆன் ஓதிக் கொடுத்தார்கள். இந்தியாவில் எந்தப் பெண்பிள்ளைகள் F.A (பன்னிரெண்டாம் வகுப்பு) போன்ற படிப்புகளை முடித்திருப்பார்களோ, அவர்கள் மூன்று மூன்று மாதங்களுக்கு காதியானுக்கு வந்து தங்குவார்கள். அப்பொழுது இவர்கள் அவர்களுக்குத் திருக்குர்ஆன் மொழியாக்கம் கற்றுக் கொடுப்பார்கள். இவர்கள் லஜ்னா அமைப்பை மிகவும் கடினமாக உழைத்து ஒருங்கமைத்தார்கள். மிகவும் அசாதாரணமான விருந்தோம்பல் பண்பு இருந்தது.

இவர்களின் மகள் கூறுகிறார்கள்: (தாயார்) அவர்கள் தந்தையாருக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்கள். மிகவும் ஏழ்மையான நிலைமை இருந்தது. மதிய வேளையில் பாசிபருப்பு மட்டுமே இருக்கும். தந்தையார் பாலுக்காகவும், தயிருக்காகவும் எருமை மாடு வைத்திருந்தார்கள். விருந்தினர் யாராவது வந்தால், என்ன இருக்கிறதோ அதை இவர்கள் தயக்கமின்றி முன் வைத்து விடுவார்கள்.

இவர்கள் ஒரு நல்ல துணைவியாராக இருந்தார்கள். கஷ்ட காலத்தில் உறுதுணையாக இருந்து வந்தார்கள். எப்பொழுதும் எந்தக் கோரிக்கையும் வைக்க மாட்டார்கள். செலவுக்கு என்ன கிடைக்கிறதோ மகிழ்ச்சியுடன் அதிலேயே செலவைக் கழித்து வந்தார்கள். தூய்மையை விரும்பக்கூடிய, மிகவும் நேர்த்தியான இயல்புடைய பெண்மணியாக இருந்தார்கள். வயதின் இறுதியில் இவர்களின் பார்வை சென்று விட்டது. (கேட்கும் திறனும் சென்று விட்டது) கருவியைக் கொண்டு மிகவும் சிரமப்பட்டு கேட்க முடிந்தது. ஆனால், அவ்வாறிருந்தும் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்வைக் கழித்தார்கள்.

நலம் விசாரிக்கப்படும் போது எப்பொழுதும் ‘அல்ஹம்துலில்லாஹ்’ என்று கூறுவார்கள். காலத்தின் கலீஃபா அவர்கள் தரப்பிலிருந்து எந்தத் திட்டம் வைக்கப்பட்டாலும் காதியானில் மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிப் அவர்கள் தரப்பிலிருந்தும், அவர்களின் துணைவியார் தரப்பிலிருந்தும்தான் முதல் சந்தா கொடுக்கப்பட்டு வந்தது.

இவர்களின் மகள் கூறுகிறார்கள்: நாங்கள் திருக்குர்ஆன் ஓதுவதில் ஏதாவது தவறு செய்தால், எங்கள் தாயார் வேறு ஏதாவது ஓர் அறையில் இருந்தாலும் அங்கிருந்தே எங்களின் தவறைத் திருத்துவார்கள். அவர்களுக்குத் திருக்குர்ஆன் மனனமாகத் தெரியும் என்பது போல் இருக்கும். நோய்வாய்ப்பட்டிருந்தாலும் மக்களின் சுக துக்கத்தில் கலந்து கொள்வார்கள். காதியானின் பெண்பிள்ளைகளுக்குத் தையல் கற்றுக் கொடுப்பார்கள். இவர்கள் காதியானில் அனைவருடனும் கலந்து இருக்கும் ஒரு பண்பாட்டை உருவாக்கி விட்டார்கள்.

இந்தியா, பாக்கிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, லாஹூரின் ரத்தன் பாக் எனுமிடத்திலும் ரப்வாவின் மண் வீடுகளிலும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குத் திருக்குர்ஆன் ஓதிக்காட்டுவதற்கும், மல்ஃபூஸாத் வாசித்துக் காட்டுவதற்கும் (மர்ஹூமா அவர்களுக்கு) நல்வாய்ப்பு கிடைத்து வந்தது.

இவர்கள் தமது ஹிஸ்ஸா ஜாயிதாத் (சொத்தில் பங்கு) மற்றும் வஸிய்யத் சந்தாவைத் தமது வாழ்நாளிலேயே செலுத்தி விட்டார்கள். இவ்வாறே, தஹ்ரீகே ஜதீதின் முதல் பதிவேட்டில் இணைந்திருந்தார்கள். தம் பிள்ளைகளுக்கு ஆரம்ப நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுமாறு அறிவுறுத்துவார்கள்.

இவர்கள் பல பெண்பிள்ளைகளைப் பராமரித்தார்கள். அவர்களுக்கு நல்ல தர்பிய்யத் கொடுத்தார்கள். பிறகு, அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். தர்வேஷிய காலகட்டத்தில், பொருளாதார நிலை மிகவும் பலவீனமாக இருந்த தருணத்தில், யாராவது ஒரு தர்வேஷின் மகளுக்குத் திருமணம் நடந்தால், இவர்கள் தம்முடைய நகைகளை அந்தப் பெண்ணுக்கு, 'நீ விரும்பும் வரை அணிந்து கொள்' என்று அணிய கொடுத்து வருவார்கள். பிறகு, வேறு ஒரு பெண்பிள்ளைக்குத் திருமணம் நடக்கும் போது, நகை அவருக்கு (அணிய) கொடுக்கப்படும்.

மக்கள் தங்களுடைய அமானிதங்களை இவர்களிடம் கொடுத்து வைப்பார்கள். இவர்கள் மிகவும் நேர்மையுடன் எல்லா அமானிதங்களையும் பார்த்துக் கொள்வார்கள். பல பெண் பிள்ளைகளுக்கு பண்பாக நடந்து கொள்ளும் முறையை கற்றுக் கொடுத்துள்ளார்கள். அவர்களின் சீர்வரிசையைத் தயார் செய்தார்கள். தர்வேஷ்களின் விதவை மனைவிகளுக்குப் பெருநாள் தொகை கொடுக்க தாமே நேரில் செல்வார்கள்.

இவர்களின் மகன் கூறுகிறார்கள்: பெரும்பாலும் விருந்தினர்கள் தாருல் மஸீஹில் தங்குவார்கள். அறைகளில் (தங்கும்) விருந்தினர்களின் தேவைகளை எப்படி முழுமைப்படுத்த வேண்டும் என்று, எங்கள் தாயார் 11, 12 வயது பிள்ளைகளுக்குத் தாமே பயிற்சி அளிப்பார்கள். அரசு அதிகாரிகளின் மனைவிமார்களுக்கும் ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்து வைத்து வந்தார்கள். ஏழைகளைப் பெரிதும் கவனித்து வந்தார்கள்.

சாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிப் அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு, 10 ஆண்டுகள் காதியானில் வாழ்ந்தார்கள். உடல்நிலை மோசமாக ஆரம்பித்த போது, இவர்களின் மகள்கள் சிகிச்சைக்காக இவர்களை ரப்வாவுக்கு அழைத்து வந்தார்கள். அப்போதும்கூட, 'நான் காலத்தின் கலீஃபா அவர்களின் அனுமதி பெறாமல் நீண்ட காலம் காதியானை விட்டு வெளியில் இருக்கக் கூடாது' என்றே கூறி வந்தார்கள். எனக்கு அவர்கள் எழுதிய போது, 'நீங்கள் எவ்வளவு காலம் இருக்க விரும்புகிறீர்களோ இருந்து கொள்ளுங்கள்' என்றே நான் பதில் அளித்தேன்.

முஸ்லிம் அல்லாத பலரும்கூட, இவர்களின் ஜனாஸாவில் கலந்து கொண்டார்கள். காதியான் மக்கள் இவர்களையும், இவர்கள் காதியான் மக்களையும் மிகவும் நேசித்து வந்தார்கள். காதியானின் பெண்களின் பல கடிதங்கள் வந்துள்ளன. அவர்கள் எல்லாம் மிகவும் அன்போடு இவர்களைப் பற்றி கூறியிருக்கிறார்கள். இதே போன்று, காதியானில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் ஆண் சந்ததிகளும், 'இவர்கள் ஒரு தாயாரைப் போன்று எங்களைப் பராமரித்தார்கள்' என்று எழுதியுள்ளார்கள்.

இவர்கள் கிலாஃபத்துடன் மிகவும் கலப்பற்ற தொடர்பு கொண்டிருந்தார்கள். இவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் பணிவுடனும், முழுமையான நன்றியுணர்வுடனும் நடந்து கொண்டிருந்தது போன்றே (மற்ற கலீஃபாக்களுடனும்) அந்தத் தொடர்பு தொடர்ந்தது. என்னுடனும் அந்தத் தொடர்பே நிலைபெற்றிருந்தது. இது ஓர் உதாரணம் ஆகும். இங்கும் என்னை சந்தித்த போது மிகவும் பணிவுடனும் கண்ணியத்துடனும் இருந்தார்கள்.

2005 இல் நான் காதியான் சென்றிருந்த போது, மிகவும் பொறுப்புடன் விருந்தோம்பல் செய்ய முயற்சி செய்தார்கள். பிறகு, ஒவ்வொரு சந்திப்பிலும் மகிழ்ச்சியடைவார்கள். அது முகத்தில் வெளிப்படும். 2005 இல் உடல்நிலை சரியில்லாமல் இருந்த போதிலும், காதியானில் இருந்து திரும்பிச் செல்லும் பயணத்தில் தில்லி வரை உடன் வந்தார்கள்.

அல்லாஹ் இவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக! இவர்களின் சந்ததிகளுக்கு இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! ஆமீன்!

காதியானின் மக்களை இவர்கள் எவ்வளவு அன்போடு வைத்திருந்தார்களோ, அதே போன்று அவர்கள் ஒருவர் மற்றவருடனும் அன்போடு இருப்பதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக! இப்பொழுது காதியானில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய குடும்பத்துடன் நேரடியான உறவுமுறை உள்ள, தொடர்பு உள்ள நபர் எவரும் இல்லை. அங்கு ஒருவர் செல்லக்கூடிய அப்படிப்பட்ட சூழ்நிலையை அல்லாஹ் ஏற்படுத்தி விடுவானாக! அல்லாஹ் மர்ஹூமா அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் யூகேவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மத் அர்ஷத் அஹ்மதி சாஹிப் அவர்களின் ஜனாஸா ஹாஸிர் மற்றும் ஆப்பிரிக்க அமெரிக்கர் மதிப்பிற்குரிய அஹ்மத் ஜமால் சாஹிப் அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழவைப்பதாக அறிவிப்பு செய்தார்கள். மர்ஹூம்களின் நற்பண்புகளையும் எடுத்துரைத்தார்கள். அந்தஸ்தின் உயர்வுக்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**